


விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் நடைபெற்ற கழக மறு சீரமைப்புப் பணிகள் குறித்து தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் கலந்து கொண்டஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார் நெடுஞ்செழியன் உள்ளிட்ட .தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

செஞ்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட

தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

செஞ்சி, அக்.22-

செஞ்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் கழக மறுசீரமைப்பு பணிகள் குறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் ஆலோசனை நடத்தினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கழக மறுசீரமைப்பு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் செஞ்சி தேசூர் ரோட்டில் உள்ள தளபதி இல்லத்தில் நடைபெற்றது.

செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு தலைமை தாங்கினார்.

அப்போது தலைமை கழகம் அறிவித்துள்ள கழக மறுசீரமைப்பு பணிகளின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை அவர் வழங்கினார். மேலும் தலைமை கழகத்தால் வழங்கப்பட்டுள்ள புதிய கழக மாவட்ட அமைப்பு பதிவு படிவத்தை பூர்த்தி செய்வதற்கான நடைமுறைகள் குறித்தும், இப்பணியை விரைந்து முடிக்க வேண்டும் எனவும் நிர்வாகிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் விஜய ராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்ரமணியன், நாராயணமூர்த்தி, துரை, இளம்வழுதி, மணிமாறன், பழனி, ரவிச்சந்திரன், சொக்கலிங்கம், ராஜாராமன், நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், பேரூர் செயலாளர்கள் சம்பத், கார்த்திக், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வடகிழக்குப் பருவமழை தீவிரம்!

தமிழகத்தில் 5 நாட்கள் கனமழை நீடிக்கும்!

சென்னை உள்பட 11 மாவட்டங்களுக்கு பலத்த மழை எச்சரிக்கை!

சென்னை, அக்.21-

வட தமிழக கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இந்த சுழற்சியில் இருந்து வட மேற்கு வங்கக் கடல் பகுதிகள் வரை ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் அனேக இடங்களில் மழை பெய்து வருகிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதியில் இரவில் மழை பெய்கிறது. மேலும் 5 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழக கடலோர மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும் அதனையொட்டிய மாவட்டங்களில் கனமழையும் இன்று பெய்யக்கூடும்.

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் ஆகிய 11 மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும்.திருச்சி, அரியலூர், பெரம்பலூர், ராணிப் பேட்டை, வேலூர், திருப்பத்தூர், தேனி, திண்டுக்கல். மதுரை, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

ஏனைய தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடி. மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று (21-ந்தேதி) தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும். தூத்துக்குடி. கன்னியாகுமரியில் ஒரு சில இடங்களில் அதிகனமழை (ரெட் அலர்ட்) பெய்ய வாய்ப்பு உள்ளது. புதுக்கோட்டை. தஞ்சாவூர், திருவாரூர். நாகப்பட்டினம், மயிலாடுதுறை, மதுரை, திண்டுக்கல். தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

22-ந்தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், தென்காசி, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும். 23-ந் தேதி நீலகிரி, கோவை, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல் மற்றும் மதுரை ஓரிரு மாவட்டங்களில் இடங்களில் கனமழையும் ஏனைய மாவட்டங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

24 மற்றும் 25-ந்தேதியில் நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, மதுரை, ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி. அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப் பேட்டை, கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இந்த நிலையில் தென் மேற்கு அரபிக் கடலில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று உருவானது.

காலை 5.30 மணி நிலவரப்படி அந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அதே பகுதியில் நீடிக்கிறது. கடந்த 12 மணி நேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று காலை அதே இடத்தில் நீடிக்கிறது. இது அடுத்த 12 மணி நேரத்திற்கு தனது தீவிரத்தை தக்க வைத்துக் கொண்டு தொடர்ந்து மேற்கு வட மேற்கு திசையில் நகரக் கூடும்.

அதனைத் தொடர்ந்து இன்று (21-ந் தேதி) வரை மேற்கு வடமேற்கு திசையிலும் 22-ந் தேதி நாளை சோமாலியா கடற்கரை நோக்கி மேற்கு தென் மேற்கு திசையிலும் நகர வாய்ப்பு உள்ளது என்று சென்னை மண்டல வானிலை ஆய்வு மைய தென் மண்டல தலைவர் விஞ்ஞானி வி.ஆர். துரை தெரிவித்து உள்ளார்.

அவர் மேலும் கூறிய தாவது:-

இந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழகத்திற்கு எந்த க்கமும் ஏற்படாது. தென்மேற்கு அரபிக் கடலிலும் சோகத்ரா தீவை சுற்றியுள்ள பகுதிகளிலும் சோமாலியா கடற்கரை பகுதிகளிலும் கடல் சீற்றத்துடன் காணப்படும்.

எனவே மீனவர்கள் 22 -ந் தேதி வரை அந்தப் பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. வருகிற 24-ந்தேதி வாக்கில் வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி 1 உருவாகக் கூடும்.

இவ்வாறு அவர் கூறினார்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, புதூரில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நூலக கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்.ஜீ. வி.மார்க்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் செந்தில்குமார் துப்புரவு மேற்பார்வையாளர் சரவணன், ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், மும்மூர்த்தி, இம்மானுவேல், புதூர் பேரூராட்சி மன்ற தலைவர் வனிதா அழகுராஜ், புதூர் மத்திய ஒன்றிய தேர்தல் பார்வையாளர் மாரிமுத்து, வார்டு உறுப்பினர்கள் வெற்றிவேலன், தினகரன் மாவட்ட பிரதிநிதி சோலைசாமி, வடக்கு மாவட்ட செயலாளர் அணி துணை அமைப்பாளர் அழகுராஜ், இளைஞர் அணி சதீஷ்குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

என்.ஆர்.பி.சீனிவாசன்

அக்டோபர் 22 (2022)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக பணியாற்றியவர்.

நம்பரை ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

சென்னை மேற்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்

சோலை ஆர்.பார்த்திபன் தாயார் பூங்கோதை அம்மையார் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக்.21-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பார்த்திபன் அவர்களின் தாயார் ஆர்.பூங்கோதை அம்மையார் நேற்று 20.10.2026, அதிகாலை உடல் நலம் குன்றி இயற்கை எய்தினார்.




தகவல் அறிந்து அம்மையாரின் உடலுக்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு. பகுதி செயலாளர்கள் மா.பா.அன்பு துரை, கே.ஏழுமலை. மாநில தொண்டர் அணி துணை செயலாளர் எஸ்.எம்.கே. அண்ணாதுரை. மாவட்ட துணை செயலாளர் வி.எஸ். கலை. மாவட்ட அமைப்பாளர்கள் திருமலை பொன்னுரங்கம் மு. செந்தில்குமார். பகுதி துணை செயலாளர்கள் மு.வெங்கடேசன் வயலட் மேரி பகுதி பொருளாளர் எம் ஜெயக்குமார் வட்ட செயலாளர் எம் என் விஷ்ணு. மாவட்ட பிரதிநிதிகள் சீ. குணசேகரன் சி. பாட்ஷா பாபு 113 வது "அ "வட்ட நிர்வாகிகள் எம் குமரேசன் சோலை எல். ரவி முருகன், எஸ்.ஆர்.எஸ்.கே. சங்கர் ஜி எம் சரவணன் சோலை சதீஷ்குமார் கு பச்சையம்மாள் ஆர்.மணி மு. பன்னீர்செல்வம் ரேணுகா சு. இளையராஜா நாகதேவன் வேல்முருகன் செல்வா உள்ளிட்ட நிர்வாகிகள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள் இறுதி ஊர்வலம் 20.10.2026 மாலை 5 மணி அளவில் சோலையப்பன் தெருவில் இருந்து புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது!

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(20.10.2026)



1. ஈரோடு மாவட்டம் பவானி அருகே நசியனூரில் விசைத்தறி பெண் தொழிலாளி அடித்துக் கொலை ....

2. விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே மாரனேரி கண்மாய் பகுதியில் நடந்து சென்ற கூலித் தொழிலாளி சரமாரியாக வெட்டிக் கொலை ...

3. விருதுநகர் அருகே தவசலிங்கபுரத்தில் முன்விரோதம் காரணமாக வீட்டினுள் புகுந்து சரமாரியாக கத்தியால் குத்தி கூலி தொழிலாளி கொலை...

4. திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அருகே தனியாக வசித்து வந்த மூதாட்டியை அடித்துக் கொலை செய்து ஆறு பவன் நகை கொள்ளை அடித்த கலெக்டர் அலுவலக தற்காலிகப் பணியாளர் சிக்கினார் ...

5. கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி அருகே நாட்றாம் பாளையத்தில் மனைவியை அடித்துக்கொலை செய்து, தற்கொலை செய்து கொண்ட கணவன் ...



6. சென்னை அடுத்த வேளச்சேரியில் தனியார் பெண்கள் விடுதிக்குள் புகுந்து பாலியல் சீண்டலில் ஈடுபட்ட வாலிபர் சிக்கினார் ...

7. ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே கட்சிப் பதவி வாங்கி தருவதாக கூறி பாலியல் தொல்லை கொடுத்த த.வெ.க. நிர்வாகி மீது பெண் போலீசில் புகார் ...

8. தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே நகராட்சி துணைத் தலைவரான அ.தி.மு.க. பிரமுகர் மீது பெண் பாலியல் புகார் ...

9. சேலம் மாவட்டம் தாரமங்கலம் அருகே எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவி கடத்திச் சென்று பலாத்காரம் செய்த வாலிபர் சிக்கினார் ....

10. தாம்பரம் அடுத்த மாடம்பாக்கத்தில் சாலையில் நடந்து சென்ற கல்லூரி மாணவியிடம் கையைப் பிடித்து இழுத்து பாலியல் தொல்லை கொடுத்த ஆட்டோ டிரைவர்கள் சிக்கினர்...

11. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே 11 வயதான வாய் பேச முடியாத மாற்றுத்திறனாளி சிறுமியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட பீகார் மாநில வாலிபர் சிக்கினார் ...

12. சென்னை தலைமைச் செயலகம் வளாகத்தில் உள்ள ராணுவ உயரதிகாரி வீட்டில் வாட்ச் மட்டும் செல்போன் திருட்டு ....

13. திருச்செந்தூர் முருகன் கோவில் உண்டியலில் திருட்டு. இரண்டு பேர் சிக்கினர்.

14. சென்னை ஆலந்தூரில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவிலில் அம்மன் நகைகள் திருட்டு ...

15. சென்னை பள்ளிக்கரணையில் ஐ.டி. நிறுவன ஊழியரை ஆட்டோவில் கடத்திச் சென்று கத்தி முனையில் பணம் பறிப்பு ..

16. ஆரணி அடுத்த கண்ணமங்கலம் - வேலூர் சாலையில் உள்ள சுங்கச்சாவடியில் ரகளை செய்த இருவரிடம் பெண் போலிஸ் சப் இன்ஸ்பெக்டர் விசாரித்த போது, சப் இன்ஸ்பெக்டர் மீது தாக்கு ...

17. சென்னை கொளத்தூர் அருகே சரித்திர பதிவேடு குற்றவாளியை பிடிக்கச் சென்ற சப் இன்ஸ்பெக்டர் மீது சரமாரி தாக்குதல் ...

18. மதுரை மாவட்டம் நாகமலை புதுக்கோட்டை அருகே பணியில் இருந்த போது நடுரோட்டில் சிறப்பு எஸ் ஐ. , சிறப்பு ஏட்டு மோதல் ...

19. பாளையங்கோட்டை மத்திய சிறையில் பரபரப்பு. சிறை அதிகாரி, வார்டன்கள் மீது கைதிகள் கொலை வெறித் தாக்குதல் ....



20.கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே வடசேரியில் வாகன சோதனையில் ஈடுபட்ட சப் இன்ஸ்பெக்டரை கார் ஏற்றிக் கொல்ல முயன்ற கல்லூரி பேராசிரியர் சிக்கினார்....

21. சென்னை நகரின் மையப்பகுதியில் இரவு விருந்து நிகழ்ச்சிகளுக்கு போதைப்பொருள் விநியோகம், சீரழியும் இளைஞர்களின் வாழ்வு ....

22. கொடைக்கானலில் உள்ள தங்கும் விடுதிகளில் கஞ்சா மெத்த பெட்டமைன் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பதுக்கல், விடுதி உரிமையாளர் சிக்கினார் ...

23.நாகையில் த.வெ.க. மாவட்ட நிர்வாகி பூபாலனிடமிருந்து 137 கிலோ மெத்தபெட்டமைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கு - சம்மன்.

நாகப்பட்டினம் அடுத்த பிரதாபுரம் கிராமத்தைச் சேர்ந்த ராஜ்குமார் என்பவருக்கு மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் சம்மன் .

த.வெ.க. மாவட்ட நிர்வாகி பூபாலனின் கூட்டாளியான ராஜ்குமாருக்கு மத்திய வருவாய் புலனாய்வு துறை சம்மன் அனுப்பியுள்ளது.

த.வெ.க. நிர்வாகியிடமிருந்து போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

24. திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அருகே பனப்பாக்கம் கிராமத்தில் தனியார் டயர் நிறுவன குடோனில் கடந்த மாதம் டயர்கள் திருடுபோயின.

குடோனில் சூப்பர்வைசராக பணியாற்றிய த.வெ.க. நிர்வாகி அமுல்ராஜ், பல லட்சம் ரூபாய் மதிப்பிலான டயர்களை திருடியது சிசிடிவி மூலம் அம்பலம்.

இந்த திருட்டு வழக்கில் த.வெ.க. நிர்வாகிகள் வினோத், கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கும் தொடர்பு இருப்பது அம்பலம் இருவரும் தலைமறைவு.

ஆளுங்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் என்பதால் போலீஸிடம் சிக்க மாட்டோம் என நினைத்தோம் - த.வெ.க. நிர்வாகி அமுல்ராஜ் வாக்குமூலம்.

25. திருப்பெரும்புதூர்:

கடந்த வெள்ளிக்கிழமை முதல் மாயமான ஜார்க்கண்ட் மாநில 8 வயது சிறுமி.

ட்ரோன் கேமரா, மோப்ப நாய் உதவியுடன் சிறுமியை தேடும் பணி தீவிரம்.

சிறுமியின் உறவினர் வீடு அருகே மோப்ப நாய் வட்டமிட்டதால் பரபரப்பு.

4 நாட்களாகியும் குழந்தையை மீட்க முடியாமல் திணறும் காவல்துறை.